

Vol.29 | No. 2 | February 2025

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



"The Church's pastoral care of those who have an addiction is an expression of God's mercy and a witness to the hope that comes from the Gospel."

Pope Francis




Diocesan Catechism Bible Fest,
January 16, 2025, Padanthalumoodu



Denha Celebration,
January 6, 2025, Puliyarai, Tenkasi Mission



Parish Feast and First Holy Communion,
January 5, 2025, Kuttaicode

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 NO :2 FEBRUARY 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| உயர் பேராயர் சுற்றுமடல் ஆயர் | 07 |
| மறைக்கல்வி | 12 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 14 |
| மறை மாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு | 15 |
| இல்வாழ்வு இயக்கம் | 16 |
| வின்செண்ட்-தே-பவுல் சபை | 17 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 19 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 22 |
| மறைமாவட்ட செய்திகள் | 24 |
| மறைவட்ட செய்திகள் | 26 |
| தென்காசி மறைபரப்புதள செய்திகள் | 36 |
| MONTHLY AGENDA - FEBRUARY 2025 | 38 |
| BISHOP'S ENGAGEMENTS | 41 |

Editorial Board

Patron
**His Excellency**
**Mar George Rajendran SDB**

Chief Editor
**Fr. Joseph Santhosh**

Associate Editors
**Mr. Edwinson**
**Fr. Antony Thakidiyel**
**Mr. Iyathurai**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Mary Jency V.M**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/166/2024**

**Dear and Rev. Fathers,** **31 January 2025**

Greetings and prayerful wishes from Bishop's House, Thuckalay!

As we continue our pastoral ministry in service of God's people, I write to address a pressing concern that affects many families in our Eparchy – the growing challenge of alcohol and drug addiction. Through this circular, I want to provide guidance and direction for our pastoral response to this critical issue that touches the lives of many of our faithful.

**The Reality in Our Eparchy**

In recent pastoral visits across our parishes, I have witnessed first-hand the harmful impact of addiction on our communities. Today, not only adults and youth are affected by this problem, but even school-going children are becoming victims of addiction. Our region has seen a concerning rise in substance abuse cases, particularly among our youth and working-class populations. Families are torn apart, children suffer in silence, and the economic stability of households is severely compromised. As shepherds of Christ's flock, we cannot remain passive observers of this growing crisis.

**The Church's Call to Response**

The Catholic Church has consistently emphasised the dignity of every human person, created in God's image and likeness. Pope Francis reminds us that "the Church's pastoral care of those who have an addiction is an expression of God's mercy and a witness to the hope that comes from the Gospel." Our mission as priests is to embody this merciful approach while actively addressing addiction's root causes and consequences.

## Understanding Addiction as a Disease

It is crucial to recognise that addiction is a complex disease that affects both the body and the soul. The Catechism of the Catholic Church acknowledges that while the initial decision to use drugs or alcohol may be voluntary, the disease of addiction impairs both judgment and freedom. This understanding should shape our pastoral approach – combining compassion, clear guidance, and mercy with the call to transformation in Christ.

## Training and Resources for Priests

To serve better those affected by addiction, as priests, we need to become aware of the gravity of the issue, have the know-how and make ourselves competent. I am sure we will have opportunities to have training programmes on this delicate issue during this year. We will make use of our monthly meetings, update programmes, retreats, etc., to enhance our confidence and accrue skills in dealing with the issues connected with addiction. If we are not careful, we ourselves can, at times, fall victim to some of these addictions.

## Practical Guidelines for Parish-Based Ministry

**Formation of Parish Support Groups:** Each parish should establish a support group for those affected by addiction and their families. These groups should meet regularly and offer spiritual support and practical guidance. Consider partnering with professional counsellors and addiction specialists who share our Catholic values.

**Sacramental Support:** The sacraments, particularly Reconciliation and the Eucharist, play a vital role in recovery. Make these sacraments readily available and ensure that those struggling with addiction feel welcomed rather than judged when approaching them. Special care should be taken during confession to offer spiritual guidance and practical support.

**Family Support Systems:** We can establish support systems for families affected by addiction. These include counselling services, prayer groups, and practical assistance when needed. Remember that addiction affects not just the individual but the entire family unit. Regular and effective family visits by priests, Sisters, and lay

leaders can help identify the victims and undertake appropriate remedial measures.

**Prevention Programmes:** We should implement prevention programmes in our parish schools and youth groups. These programmes should include age-appropriate education about addiction, emphasising both the medical and spiritual aspects of the issue. We should also involve parents and teachers in these initiatives.

Our Family Apostolate and Health Commissions are vibrant and active. They can greatly help implement some of these guidelines in our parishes. For many years, the Family Apostolate department has been organising a de-addiction ministry in Kalluvilai. Unfortunately, not many from our diocese have profited from it. Let us make good use of their expertise to address these issues. If you come across anyone struggling with addiction and in need of personal attention and treatment at a rehabilitation centre, we are more than willing to assist. Please feel free to reach out to the Director of the Family Apostolate for guidance, support, and necessary arrangements to ensure they receive the care they need.

The Role of Prayer and Spiritual Direction

The spiritual dimension of recovery from addiction cannot be overstated, as it touches the deepest longings of the human heart, where true healing begins. While we fully embrace the vital role of medical and psychological interventions, our distinct contribution as priests is nurturing the soul's journey toward healing through prayer and spiritual direction. This aspect of ministry requires particular attention and careful cultivation, as it often becomes the foundational support upon which other therapeutic interventions can effectively build.

In providing spiritual direction to those struggling with addiction, we must first recognise that feelings of shame, abandonment, or unworthiness may complicate their relationship with God. We gently guide them toward experiencing God's unconditional love and mercy. Through regular spiritual direction sessions, help them discover or rediscover their fundamental identity as beloved children of God. This recognition often becomes a powerful catalyst for healing and transformation.

The integration of prayer into the recovery process should be thoughtfully structured yet flexible enough to meet individuals where they are in their spiritual journey. Begin by introducing simple prayer practices that can be easily incorporated into daily life. Teach them the practice of sacred reading (Lectio Divina) with carefully selected Scripture passages that speak to God's mercy, healing, and restoration. With their raw honesty and deep emotional resonance, the Psalms often provide particular comfort and expression for those in recovery.

Eucharistic Adoration holds a special place in addiction recovery ministry. Encourage regular periods of silent presence before the Blessed Sacrament, where individuals can profoundly experience Christ's healing presence. Many in recovery have found that time spent in Adoration helps reduce anxiety, strengthen resolve, and provide peaceful clarity in times of temptation. Consider establishing specific hours of Adoration in your parishes dedicated to praying for those struggling with addiction and their families.

With its contemplative rhythm and focus on the mysteries of Christ's life, the Rosary can become a powerful tool for maintaining spiritual and emotional stability. Teach those in recovery to use the Rosary not just as a prayer but as a practical means of managing stress and cravings. The physical aspect of holding the beads, combined with the meditative prayers, can provide comfort and focus during difficult moments.

Create opportunities for community prayer that bring together those in recovery with their families and support systems. Monthly healing services, incorporating the Sacrament of Anointing when appropriate, can provide powerful moments of grace and community support. These services should be carefully planned to maintain appropriate confidentiality while fostering a sense of belonging within the parish community.

Spiritual direction sessions should also address the practical integration of Catholic social teaching and moral principles into recovery. They should help individuals develop a spiritual framework for making decisions, managing relationships, and rebuilding trust. They should also guide them in understanding how the virtues,

particularly prudence and temperance, can be practically developed and applied in their journey of recovery.

As spiritual directors, we must also be attentive to the tendency to use spiritual practices to avoid dealing with psychological or emotional issues. While emphasising the spiritual dimension, we encourage a holistic approach, acknowledging the need for professional counselling and medical support when appropriate. We help those in recovery understand that seeking professional help is not a lack of faith but rather responsible stewardship of their God-given gift of life.

Remember that the family members of those struggling with addiction also need spiritual direction and support. Offer them guidance in maintaining their spiritual well-being while supporting their loved ones. Help them develop a spirituality of hope and perseverance, drawing strength from the communion of saints and the witness of those who have experienced healing through faith.

**CONCLUSION**

As I conclude my circular, I reflect with earnestness and hope on the solemn inauguration of the Christ Jubilee 2025 in all our parishes, under the theme "Pilgrims of Hope." I strongly recommend that this Jubilee Year be an opportunity for all of us, especially priests, to celebrate Jesus, who has called us, and to rejoice in our priesthood with gratitude and joy.

I sincerely thank you for your dedicated ministry in the Eparchy on behalf of our people. I am confident that the good Lord will bless you abundantly. Let us continue to pray for the intentions of the Eparchy and re-dedicate ourselves to serving our people with even greater enthusiasm and commitment.

May the Lord continue to bless you and your ministries! With my prayers and blessings,

Yours in Christ Jesus,






† George Rajendran SDB
Bishop of Thuckalay

Mar Raphael Thattil

Major Archbishop of the Syro-Malabar Church

Prot.No. 0024/2025

உயர் பேராயரின் ஆயர் பேரவைக்கு பிந்தைய சுற்றுமடல் சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ரபேல் தட்டில், தனது உடன்பணியாளர்களான பேராயர்கள் ஆயர்கள் அருட்பணியாளர்கள் துறவறத்தார்கள் மற்றும் தனது மேய்ப்பு பணியின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லா இறை மக்களுக்குமாக எழுதுவதாவது. இறையருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**மெசியாவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே,**

சீரோமலபார் திருச்சபையின் முப்பத்தி மூன்றாவது ஆயர்பேரவையின் முதல் கூடுகை 2025 ஜனவரி 6 முதல் 11 வரை சபையின் தலைமையிடமாகிய மவுண்ட் செயிண்ட் தாமஸில் வைத்து நடைபெற்றது. 'எதிர்நோக்கின் திருப்பயணிகளாக' நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் மனுவுருவாதலின் யூபிலி வருடத்திற்குள் அடியெடுத்து வைத்திருக்கிறோம். 'எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது'; எனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாகக் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது (உரோ. 5:5) என்னும் பவுலடியாரின் வார்த்தைகள் கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு என்ன என்பதைத் தெளிவாக விளக்குகிறது. எதிர்பார்ப்புக்கு எதிராக நமக்கு வருத்தமளிக்கின்ற மற்றும் ஊக்கம் இழக்கச் செய்கின்ற செய்திகள் அதிகரிக்கும்போதும் நமது ஆண்டவரின் வருகையை எதிர்நோக்குடன் காத்திருந்து முன்னேற நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல 'நமது நம்பிக்கை வாழ்க்கை எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை வாழ நமக்கு உந்து சக்தியாக இருக்கிறது. அது திருமுழுக்கில் தொடங்கி இறையருளோடு உள்ள நெருக்கத்தில் வளர்ந்து, தூய ஆவியாரின் செயல்கள் வழியாக என்றும் புதுப்பிக்கப்படுகின்றதும், வலியுறுத்தப்படுகின்றதுமான எதிர்பார்ப்பில் உறுதிப்படுத்தப்படுகிறது'. எதிர்பார்ப்பை நமக்கு வழங்கும் செயல்கள் செய்து யூபிலி ஆண்டைக் கொண்டாட நாம் முயற்சி செய்வோம்.

சீரோ மலபார் திருச்சபையைப் பொறுத்தமட்டில் எதிர்பார்ப்பை

வழங்கும் அருளின் அனுபவத்தை அனுபவிக்கும் காலமும் இது. நமது திருச்சபையின் அங்கமான பேரருட் தந்தை ஜார்ஜ் கூவக்காட்டு அவர்கள் குருவானவர் என்னும் நிலையிலிருந்தபோதே கர்தினாலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது நமது திருச்சபைக்குப் பெருமையாக அமைகின்றது. அவரின் எதிர்கால சேவைக்குத் திருச்சபையின் பெயரில் ஜெபங்களும் வாழ்த்துகளும் தெரிவித்துக்கொள்கிறேன். வளைகுடா நாடுகளில் வாழும் சீரோ மலபார் கிறிஸ்தவர்களுக்குத் தேவையான பணிகளை செய்ய நமது திருச்சபை தக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பது நீண்ட நாள் கனவாக இருந்தது. தற்பொழுது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்திருக்கும் தீர்மானங்கள் நமக்கு எதிர்பார்ப்பையும் மகிழ்ச்சியையும் வழங்குவதாக அமைகின்றது. நம் அனைவர் உள்ளத்திலும் துக்கத்தை ஏற்படுத்திய வயநாடு விலங்நாடுஇயற்கைப் பேரழிவில் வாடிய குடும்பங்களுக்குப் புதது; யிர் வழங்க ஒரு மனதாக நின்று பணி செய்தது நமது எதிர்பார்ப்பை வலுப்பெறச் செய்வதாக அமைகின்றது. இந்த வருடம் நமது திருச்சபைக்கு 287 புதுகுருக்களும் 404 புது துறவிகளும் கிடைத்துள்ளததை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

## விவசாயிகளின் துன்பங்கள் போக்கப்பட வேண்டும்

விவசாயத்தை மட்டும் நம்பி வாழ்பவர்களுடையவும், எல்லை காடுகளில்வாழும் சாதாரண மனிதர்களின் துன்பங்களையும், வேதனைகளையும் மிகக் கவனமாக ஆயர் பேரவை மதிப்பீடு செய்தது. சட்டசபையில் முன் வைக்க வெளியிடப்பட்ட கேரளா வைத்திருத்த மசோதாவைக் குறித்து ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்குக் கவலையும் சந்தேகங்களும் உண்டு. கேரளாவில் காடுகளின் எல்லைகள் அதிகரிக்கும் போதும், காடுகளுக்கான சட்டங்கள் அதிக கண்டிப்பாக்கப்படுவது அதிகாரிகள் தங்களது அதிகாரத்தைத்தவறாக பயன்படுத்துவதையும் பொதுமக்களின் சுதந்திரத்தையும் பாதிப்பதாக அமைவதால் இந்த மசோதாவை திருத்தி அமைக்க வேண்டும் என்று ஆயர் பேரவை அரசுக்கு வலியுறுத்துகிறது.

## கூட்டொருங்கியக்க திருச்சபை

திருச்சபையின் ஐக்கியத்தை வலுவூட்டவும் கருணையின் முகத்தை அதிகமாக வெளிக்காட்டவும் திருத்தந்தை பிரான்சிஸ் ரோமாவில் வைத்து நடத்திய ஆயர் பேரவையின் இறுதி கையேடு அடிப்படையில் நமது ஆயர் பேரவையிலும் எவ்வாறு மாற்றங்கள் சபையில் செய்யலாம்

என்றும் அதன் வழியாக எவ்வாறு ஒருங்கே பயணிக்கும் திருச்சபையாக கடவுளுக்கு உகந்த மக்களாக வாழலாம் என்றும் என்று கூடி ஆலோசிக்கப்பட்டது. இந்த கையேடின் அடிப்படையில் எவ்வாறு பங்களவிலும் மறைமாவட்ட அளவிலும் பயன்தர கூடிய செயல்களைச் செய்யலாம் என்று கூடி ஆலோசிக்க வேண்டும். நமது சீரோமலபார் திருச்சபை சந்திக்கும் அனைத்து பிரச்சனைகளைக் கண்டுபிடிக்கவும், அதற்குத் தகுந்த தீர்வுகளை கண்டுபிடிக்கவும் 2026 ஆம் ஆண்டு சீரோமலபார் திருச்சபையில் சமுதாயத்தை வலுப்படுத்தும் வருடமாக அறிக்கையிட நமது ஆயர் பேரவையில் தீர்மானிக்கப்பட்டது. பாலாவில் வைத்து நடைபெற்ற ஐந்தாவது உயர் பேராயர் மாமன்றத்தில் சமுதாயத்தை வலுப்படுத்த உதவி செய்ய தீட்டப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைத்து மறை மாவட்டங்களும் கவனிக்க வேண்டும்.

## எர்ணாகுளம் அங்கமாலி உயர்மறை மாவட்டம்

எர்ணாகுளம் அங்கமாலி உயர் மறைமாவட்டதத்தில் நடக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண நீண்ட நாட்களாக முயற்சிகள் நடந்த போதும் அந்த பிரச்சனைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை என்னும் உண்மையை ஆயர் பேரவையின் ஆயர்கள் தாழ்மையோடு ஏற்றுக் கொள்கிறார்கள். ஒற்றுமையின் புதிய உதயமானது வெகு தூரத்தில் இல்லை என்ற எதிர்பார்ப்போடு ஆயர் பேரவையின் ஆயர்கள் அங்கு நடக்கும் பிரச்சனைகளைக் குறித்து ஆலோசனை செய்தார்கள். எர்ணாகுளம் அங்கமாலி உயர் மறைமாவட்டதத்தின் திருத்தூது பரிபாலகராக பணியாற்றிய மார் போஸ்கோ புத்தூர் ஆயரின் பணிகள் அனைத்தும் எதிர்பார்ப்பைத் தருவதாக இருந்ததாக ஆயர்பேரவை முழு மனதோடு கூறியது. திருத்தந்தையின் கட்டளைகளையும் ஆயர் பேரவையின் அறிவுரைகளையும் முழுமையாக ஏற்றுக் கொண்டு திருத்தூது துணிவோடு அவர் உயர் மறைமாவட்டதத்திற்காக 24 குரு மாணவர்களின் குருத்துவ அருட்பொழிவை நடத்தினார். உயர் மறைமாவட்டதத்தின் அமைதியைக் காக்க அவர் நடத்திய செயல்கள் பொருத்தமானவை என ஆயர் பேரவை முழு மனதோடு ஏற்றுக்கொண்டது.

ஆனால் உடல் நலக்குறைவு காரணமாக 2024 செப்டம்பர் மாதத்தில் ஆயர் அவர்கள் திருத்தந்தைக்குத் தனது பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்திருந்தார். 2025 ஜனவரி மாதம் 11-ம் நாள் அவரது பதவி காலம்முடிந்ததாக வத்திக்கானில் இருந்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதோடு, திருத்தூது பரிபாலனம் நிறைவாக்கப்பட்டு, 2025 ஜனவரி 11 முதல் எர்ணாகுளம் அங்கமாலி உயர் மறைமாவட்டதத்தின்

அதிகாரம் முழுமையாக உயர் பேராயருக்கு வழங்குவதாக திருத்தந்தையின் அலுவலகத்தில் இருந்து ஆணை வெளியிடப்பட்டது. மிகவும் கடினமான ஒரு காலகட்டதத்தில் திருச்சபையின் மனதை ஒத்து உயர் மறைமாவட்டத்தை நன்முறையில் வழி நடத்திய மார் போஸ்கோ புத்தூர் ஆயருக்கு திருச்சபையின் நன்றியையும் பாராட்டுகளையும் மிக்க மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சபையின் உயர் பேராயரின் வேலைப்பளுவைக் கணக்கில் எடுத்து எர்ணாகுளம் அங்குமாலி உயர் மறைமாவட்டதத்திற்கு உயர் பேராயரின் முகவராக ஒரு அருட்தந்தையை ஏற்படுத்த ஆயர் பேரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஜெபத்துடன் கூடிய கலந்தாய்வுகளுக்குப் பின் தூய ஆவியாரின் துணையால் ஆயர் பேரவை ஆயர்கள் இந்த பதவிக்காக தலச்சேரி உயர் மறைமாவட்டதத்தின் பேராயரான மார் ஜோசப் பாம்ப்ளானி அவர்களைத் தேர்ந்தெடுத்தனர். அவர் தொடர்ந்து தலச்சேரி உயர் மறைமாவட்டதத்தின் பணிகளையும் செய்வார். எர்ணாகுளம் அங்கமாலி உயர் மறைமாவட்டதத் தின் பிரச்சினைகளுக்குத் திருச்சபை விரும்பும் ஒரு சுமூக தீர்வானது ஏற்படும் என ஆயர்களுக்கு நம்பிக்கை உண்டு.

இந்த யூபிலி ஆண்டில் எதிர்பார்ப்பின் திருப்பயணிகளாக இயேசுவோடு இணைந்து பயணிக்க உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கிறேன். இவ்வேளையில் சில காரியங்களுக்குத் தெளிவான பதில் அளிக்க ஆயர் பேரவையின் ஆயர்கள் சார்பாக விரும்புகின்றேன். சீரோ மலபார் திருச்சபையின் ஆயர் பேரவை தீர்மானித்ததும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரண்டு முறை கடிதங்கள் வாயிலாகவும் ஒருமுறை காணொளி காட்சி வாயிலாகவும் நம்மோடு வேண்டிய ஒருங்கிணைந்த திருப்பலிமுறை சீரோ மலபார் திருச்சபை முழுவதுமாக நடைமுறைப்படுத்தும் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருத்தந்தை இறுதி தீர்மானம் அறிவித்த இந்த காரியத்திற்கு மற்றுமொரு மறுபரிசீலனைக்கு எந்த ஒரு வாய்ப்பும் இல்லை என்ற உண்மையை அனைத்து கத்தோலிக்க மறைவுண்மையில் நம்பும் மக்களும் புரிந்து கொள்ள வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

2024 ஜூலை மாதம் ஒன்றாம் நாள் வழங்கப்பட்ட விளக்கக் கடிதத்தை (Ref. No. 6/2024) நிரந்தரமான ஒரு தீர்வாக யாரும்

நினைக்கக் கூடாது. எர்ணாகுளம்அங்கமாலி உயர் மறைமாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை திருப்பலிகளில் ஒன்றாவது ஒருங்கிணைந்த திருப்பலி முறையாக சொல்பவர்களுக்கு எதிராக ஜூன் 9 அன்று வழங்கிய சுற்று மடலில் (சுநக. மே. 4ஃ2024) கூறியுள்ளவாறு உள்ள தண்டனைகள் எடுக்கப்படமாட்டா என்ற பொருளைத் தரும் விதம் விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. இதனை, ஒருங்கிணைந்த திருப்பலி முறையை நடைமுறைப்படுத்துவதன் முதல் படியாகக் கருத வேண்டும்.

ஆராதனை முறையை பற்றிய பலவிதமான கருத்து வேறுபாடுகள் தெருச்சண்டைகளாக மாறுவது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கின்றது. ஒற்றுமையின் திருமறைப்பொருளாகிய திருப்பலி அர்ப்பணம் ஒரு இடத்தின் அமைதியைக் கெடுக்கும் காரியமாக மாறுவதை நினைக்கும் போது சபையில்உள்ள அனைத்து மக்களுக்கும் அது துக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த நிலையில் நாம் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வது நன்றல்ல என்பதை அனைவரும் உணர வேண்டும். ஆயர் பேரவையோடு இணைந்து செயல்படுகிறோம் என்னும் பெயரில் சமூக ஊடகங்களிலும் தெருவிலும் திருச்சபையை அவமானப்படுத்தும் ரீதியில் செயல்படுபவர்களின் செயல்களும் திருச்சபைக்கு எதிரானது என நினைவூட்டுகின்றேன். நமது அன்னையாம் தூய கன்னிமரியாவினுடையவும், தூய யோசேப்பு தந்தையுடையவும், புனித தோமையாருடையவும், அனைத்து புனிதர்களுடையவும், அருளாளர்களுடையவும் துணையும் அருளும் நம் அனைவரோடும் நமது அனைத்து செயல்களோடும் இருப்பதாக.

காக்கநாடு மவுண்ட் செயின்ட் தாமஸ் இல் உள்ள உயர் பேராயரின் அலுவலகத்தில் இருந்து 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் தேதி வழங்கப்பட்டது.

மார் ராஃபேல் தட்டில்
சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன"**
**(உரோமையர் 10:15)**

***ஊக்குவிப்பாளர்களின் கூட்டம்***



நமது மறைமாவட்ட மறைக்கல்வியின் ஊக்குவிப்பாளர்களின் கூட்டம் 2025 ஜனவரி 11 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து இயக்குநர் தந்தை. அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. இயக்குநர். அருட்தந்தை அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து மறைமாவட்ட விவிலியக்கலைவிழா சிறப்பாக நடைபெற என்னென்ன செய்ய வேண்டும் என்பது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. தொடர்ந்து மறைவட்ட அளவில் நடைபெற்ற விவிலியக்கலைப் போட்டிகளைப் பற்றி கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் முதல் பார்வையிட்ட அறிக்கை சமர்ப்பித்தார்கள். மேலும் 2 –வது பார்வையிட வேண்டிய படிவங்கள்

அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டது. ஊக்குவிப்பாளர்கள் அனைவரும் கலந்துக்கொண்ட இக்கூடுகை செபத்துடன் 6.00 மணியளவில் முடிவடைந்தது. அனைவருக்கும் தேனீர் வழங்கப்பட்டது.

**மறைமாவட்ட விவிலியக் கலைவிழாப் போட்டிகளில் வெற்றி பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியல்**

| Parish | Points | Rank |
|---|---|---|
| St. Little Flower Sunday School, Manjalu-moodu | 57 | 1 |
| St. Xaviers Sunday School, Varuthattu | 45 | 2 |
| St. Little Flower Sunday School, Pilankalai | 31 | 3 |

**மறைமாவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் அதிக புள்ளிகள் பெற்ற மறைவட்டங்களின் விபரம்**

| Forane | Points | Rank |
|---|---|---|
| Manjalumoodu Forane | 91 | 1 |
| Nithiravilai Forane | 71 | 2 |
| Thuckalay- Pilankalai Forane | 58 | 3 |
| Padanthalumoodu Forane | 55 | 4 |
| Soosaipuram Forane | 53 | 5 |
| Kaliyal Forane | 40 | 6 |
| Arukany Forane | 21 | 7 |
| Tenkasi Mission | 12 | 8 |

# சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

## பொங்கல் கொண்டாட்டம்



தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் பொங்கல் கொண்டாட்டம் 2025 ஜனவரி 15 திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் துணை இயக்குநர் அருட்தந்தை ஆன்றணி தகடியேல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்கள் திரு. ஜினோ அனைவரையும் வரவேற்று பேசினார். மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்கள் திருமதி. ஜெயராணி அவர்கள் தொடக்கவுரை வழங்கினார். தெடர்ந்து நடுவண் செயற்குழு தலைவர் மனோஜ் மற்றும் ஆலோசகர் அஜித் ஆகியோர் வகுப்புகள் நடத்தினர். தொடர்ந்து மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டு சிறு விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. தொடர்ந்து சமத்துவ விருந்து நடைபெற்றது. மதியம் 2 மணி அளவில் ஏற்கனவே கொடுத்திருந்த குழுக்கள் அடிப்படையில் தனித்தனியாக பொங்கல் வைத்தல் போட்டிகள் மற்றும் கொண்டாட்டம் நடைபெற்றது. வடம் இழுத்தல், பாட்டிலில் தண்ணீர் நிரப்புதல் மற்றும் பல போட்டிகள் நடைபெற்றது. நிகழ்ச்சிகளை மறைமாவட்ட தலைவர் மனோஜ் தொகுத்து வழங்கினார். அனைத்து ஏற்பாடுகளையும் நடுவண் செயற்குழு உறுப்பினர்கள் ஒருங்கிணைத்திருந்தனர். இதில் 45 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

***நடுவண் செயற்குழு கூட்டம்***

SMYM நடுவண் செயற்குழு கூட்டம் 2024, ஜனவரி 12 அன்று மதியம் 2.00 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் இணை இயக்குநர் அருட்தந்தை ஆன்றணி அவர்கள் தலைமை தாங்கினர். இளையோர்களின் சார்பாக கிறிஸ்து யூபிலி 2025 எவ்வாறு கொண்டாடுவது குறித்து விவாதிக்கப்பட்டது. ஜனவரி 15 அன்று பொங்கல் விழா எவ்வாறு கொண்டாடுவது என்பது குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் பிப்ரவரி 16 ஞாயிற்றுக்கிழமை இளையோர்களின் கிறிஸ்து யூபிலி நிகழ்வுகளின் தொடக்கவிழா நடத்தலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இயக்குநர் தந்தையின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவுபெற்றது.

# மறை மாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு



மார்த்தாண்டம் பங்கை சார்ந்த தீபா என்பவருக்கு பிப்ரவரி 2ஆம் தேதி பொதுநிலையினர் பணிக்குழு சார்பாக நலவாரிய அட்டை பெற்றுத்தரப்பட்டது. அதனை பேரருட்தந்தை தோமஸ் சத்தியநோசன் வழங்கினார். அருட்தந்தை ஜோஸ்மோன் உடனிருந்தார். இக்கூட்டம் மறைமாவட்ட தலைவர் Adv. தனசிங் தலைமையில் நடைபெற்றது.

# இல்வாழ்வு இயக்கம்
## தக்கலை மறைமாவட்டம்



- கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகம் திங்கள் முதல் வியாழன் வரை வாரந்தோறும் செயல்படுகிறது. வாரத்தின் முதல் மற்றும் மூன்றாவது திங்கள் கிழமைகளில் மனநல மருத்துவர் ராபின் ஜோசப் அவர்கள் வருகை புரித்து மது மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமை பட்டவர்களையும் மனநோயாளிகளையும் சந்தித்து ஆலோசனைகள் வழங்கி சிகிட்சை அளித்து வருகிறார்.
- இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வாரத்தில் நான்கு நாட்களும் ஆற்றுப்படுத்துதல் நடைபெற்று வருகின்றன. மது நோயாளிகள் குடும்பத்தினர், மனநோயாளிகள் குடும்பத்தினர் மற்றும் மாணவர்கள், இளையோர்கள், குடும்பப் பிரச்சனை, கணவன் மனைவி பிரிவினை ஆகியோர்களுக்கு இயக்குநர் தந்தை மற்றும் அருட்சகோதரியாலும் ஆற்றுப்படுத்துதலும் நடைபெற்று வருகின்றன.
- இல்வாழ்வு இயக்கப் பணியாளர்கள் ஒவ்வொரு செவ்வாய் கிழமைகளிலும் காரோடு தேவசகாயம் நல்வாழ்வு நிலையத்தில் இருக்கும் மனநோயாளிகளை சந்தித்து அருட்சகோதரி அவர்களால் ஆற்றுப்படுத்தபட்டும் வருகின்றனர்.
- ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் திருமண ஆயத்த பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. பயிற்சியின் போது ஒப்புரவு வழிபாடும், ஆற்றுப்படுத்துதலும் நடைபெறும்
- மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் செயல்பாடுகள் மறைமாவட்ட அளவிலும், பங்குகளிலும் நல்முறையில் செயல்பட்டு வருகின்றன.

***அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்***
***இயக்குநர்***

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

# வின்சென்ட்- தே-பவுல் சபை

## புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம் கழுவந்திட்டை

திட்டம் வழங்குதல் படந்தாலுமூடு வட்டார சபைக்கு உட்பட்ட கழுவன்திட்டை பெண்கள் கிளை சபை சார்பில் ஆடு வழங்கும் திட்டம் நடைபெற்றது. 12.01.2025 ஞாயிறு காலை 10 மணிக்கு ஆன்மீக ஆலோசகர் அருள்தந்தை ஜஸ்டின் சேறுவேலில் அவர்கள் திட்டத்தை தொடங்கி வைத்தார். வட்டார சபை பொறுப்பாளர் சகோ வின்சென்ட் ராஜ் முன்னிலை வகித்தார். இதற்குரிய ஏற்பாடுகளை கிளைச் சபையினர் சிறப்பாக செய்திருந்தனர்.



## புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம் மார்த்தாண்டம்

மார்த்தாண்டம், புனித வின்சென்ட் தே பவுல் ஆலயத்தில் புதிதாகக் தொடங்கப்பட்டுள்ள புனித வின்சென்ட் தே பவுல் சபையின் புனித தேவசகாயம் பிள்ளை கிளைச் சபையின் உறுப்பினர்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்ளும் நிகழ்வு 12-01-2025 ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியினைத்தொடர்ந்து நடைபெற்றது. ஆன்மீக ஆலோசகர் அருட்திரு ஜோசப் மோன் அவர்கள் முன்னிலைவகித்து இறை ஆசி வழங்கினார். மத்திய சபையின் விரிவாக்கம் மற்றும் திட்ட இணை அலுவலர் சகோதரர் கிறிஸ்துதாஸ் அனைவருக்கும்

உறுதி மொழியினை சொல்லிக் கொடுத்தார். பின்னர் தலைவர் சகோ. ராஜா எரிக்



காட்வின், துணைத்தலைவர் சகோ. சுகுமாரி, செயலர் சகோ. செல்வகுமார், பொருளர் சகோ. ராபின் ஆன்றணி ஆகியோர் பதவி ஏற்பு உறுதி மொழியினையும் எடுத்துக் கொண்டனர்.

தகவல் சேகரிப்பு
சகோ. ஷாஜி, D.P.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

**பிப்ரவரி 11 – உலக நோயுற்றோர் தினம்**

**பிப்ரவரி 13 – சங்கமத்தில் அருட்தந்தையர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி**

**பிப்ரவரி 14 – பக்த இயக்கங்களின் அறிக்கை சமர்பித்தல்**

**பிப்ரவரி 16 – இளைஞர்களின் விழா**

**பிப்ரவரி 22 – KKSSS இல் மாற்றுத்திறனாளிகளின் விழா**

**பிப்ரவரி 23 – தெற்றிவிளை ஆலய அர்ச்சிப்பு**

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

***பொங்கல் விழா***



தமிழர்களால் கொண்டாடப்படும் மிக முக்கியமான பண்டிகைகளில் ஒன்று பொங்கல். இது தமிழ்நாட்டில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் பண்டிகையாகவும் திகழ்கிறது. அந்த வகையில் பெங்கல் விழா, கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சார்பில் ஜனவரி 17 தேதி அன்று மிக சிறப்பாக, பாரம்பரிய முறைப்படி கொண்டாடப்பட்டது. அதில் அனைத்து பணியாளர்களும் இணைந்து மண்பானையில் பொங்கல் வைத்தனர். இந்நிகழ்வு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருட்தந்தை. தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அலுவலகப்பணியாளர்கள் கலந்து கொண்டனர். விழா முடிவில் அனைவருக்கும் பொங்கல் இனிப்பு வழங்கப்பட்டது.

***பொங்கல் விழா***



கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் சுய உதவி குழுக்கள் சார்பாக பொங்கல் விழா பல்வேறு மையங்களில் நடைபெற்றது. தெற்றியோடு மையத்தில் தெற்றியோடு பங்குதந்தை அருட்தந்தை பிரிண்டோ அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது. ஜனவரி 14ஆம் தேதி தெற்றியோட்டில் குழு கோலப்போட்டியும் நடைபெற்றது. நிகழ்வில் வண்ண கோலமிட்டு புது பானையில் பொங்கல் வைத்து, இறைவனுக்கு நன்றி செலுத்தினர். இறுதியாக இனிப்புகள் பரிசுப்பொருட்கள் வழங்கி பொங்கல் வாழ்த்துகளை பகிர்ந்து கொண்டனர்.

***இயற்கை மருத்துவ முகாம்***



கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் மக்ஸ் இயற்கை மருத்துவமனை இணைந்து நடத்திய சித்த மருத்துவ முகாம் பென்கிரி, புனித பெனடிட் ஆலய வளாகத்தில் ஜூலை 28-ஆம் தேதி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு KKSSS இயக்குநர்தந்தை. அவர்களின் வழிகாட்டுதலில் SHG ஒருங்கிணைப்பாளர் திரு. அஜின் தலைமையில் நடைபெற்றது.

இதில் மக்ஸ் இயற்கை மருத்துவமனை பயிற்சியாளர் திரு. கிறிஸ்து தாஸ் அவர்கள் "இயற்கை மருத்துவம் இன்றைய கால கட்டம்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அப்போது இயற்கை மருத்துவம் ஆக்கபூர்வமானது. மனிதனின் உடல் நலம், மன நலம், கட்டுபாடு, உணர்வு, ஆன்மீகம்,

ஆகியவற்றினை இயற்கையுடன் ஒன்றிணைத்து நோயை குணமாக்ககூடியதாகும். உடல் நலத்தை மேம்படுத்துதல், நோய் வராமல் தடுத்தல், நோய் வந்த பின் சரிசெய்தல், இழந்த சக்தியை மீண்டும் பெற செய்திடும். இயற்கை முறை மருத்துவம் என்பது இயற்கையிலேயே மனித உடல், தமக்கு தாமே சமன் செய்து நோயை குணமாக்கும் முறையாகும். இயற்கை மருத்துவம் உடலில் நோய் காரணிகள் மற்றும் விசத்தன்மை மற்றும் தேவையற்ற கழிவுகளை வெளியேற்றுவதன் மூலமாக நோய் குணமாக்கப்படுகிறது. இதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 85 பேர் கலந்து கொண்டனர். நிகழ்வை பென்கிரி களப்பணியாளர் திருமதி. லதிகா அவர்களுடன் இணைந்து சுய உதவி மகளீர் ஒருங்கிணைத்தார்கள்.

***அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்***
***செயலர்***

| BIRTHDAY OF REV. FATHERS - FEBRUARY - 2025 | |
|---|---|
| Fr. Jose Vayalil | 01 |
| Fr. Santhosh Kayyalaparampil CMI | 10 |
| Fr. Jinu Jacob Thekkethlackal | 15 |
| Fr. Jose Koolipurackal CMI | 17 |
| Fr. Seby Manimalakandathil | 21 |
| Fr. Robins Jacob Kunnummalil | 23 |
| Fr. Peter Kizhakkeyil | 25 |
| Fr. Chacko Puthiyaparampil | 26 |
| Fr. Joshy Kulathumkal | 28 |
| Fr. Prince Maliyil | 28 |

# அருட்சகோதரர்களிடமிருந்து

**"தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே உன்னை நான் அறிந்திருந்தேன்; நீ பிறக்குமுன்பே உன்னை நான் திருநிலைப்படுத்தினேன்; மக்களினங்களுக்கு இறைவாக்கினராக உன்னை நான் ஏற்படுத்தினேன். "(எரேமியா 1:5)**

உஜ்ஜேன் உயர் குருமடத்திலில் பயின்ற திருத்தொண்டர் அமண்டோ 2025 ஜனவரி 2 ஆம் தேதி குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். அவரது பணி சிறக்க வாழ்த்துக்கள். ருஹாலயா செமினரியில் ஜனவரி 14, 15 தேதிகளில் இரண்டு நாட்கள் தேசிய தத்துவ மாநாடு "Frontiers of Transcendence" என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்தியாவின் Missile woman, டாக்டர் டெஸி தாமஸ் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். மாநாட்டில் 10 ஆய்வுக்கட்டுரைகள், அதன் பல்வேறு அம்சங்களைப் பற்றி கலந்துரையாடப்பட்டது. ஜனவரி 15, உயர் பேராயர் மார் ரபேல் தட்டில் அவர்களின் இறுதிச் செய்தியுடன் நிறைவுற்றது.



உயர் பேராயர் முதல் முறையாக வருகை தந்ததோடு, இரண்டாவது நாள் அவர் திருப்பலியையும் நிறைவேற்றினார். மாலையில் உயர் பேராயர் ருஹாலயா இறையியல் கல்லூரியை இறையியல் நிறுவனமாக அறிவித்தார்.

தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தின் பாரம்பரிய புத்தாண்டு கொண்டாட்டங்களைக் குறிக்கும் வகையில், பூந்தமல்லி திரு இருதய உயர்

குருமடத்தில், கருத்தரங்கம் நடைப்பெற்றது. ஜனவரி 14ஆம் தேதி பொங்கலும், மார்ச் 30 ஆம் தேதி உகாதி பண்டிகையும் கொண்டாடப்பட்டது. மூன்றாம் ஆண்டு பயிலும் சகோதரர்கள் தங்கள் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்தனர். அருட்சகோ. டோனி அவர்கள், கேரளாவில் குந்நூத்தில் வைத்து நடந்த உயர் குருமடங்களுக்கான 100 மீட்டர் தடகள போட்டியில் முதல் இடம் பெற்று மறை மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தார். அவருக்கு மனமார்ந்த வாழ்த்துகள்.

**முக்கூட்டுகல் புனித மரியன்னை இளம் குரு மடத்தில் பொங்கல் விழா**



கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் முக்கூட்டுகல் ஆலயத்தில் உள்ள மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களும் இளம் குருமட இயக்குனர் தந்தை மற்றும் அருள் சகோதரர்களும் கலந்து கொண்டனர். அருட்தந்தை. மிஜோ, அருட்தந்தை சுபின் ஆகியவர்களின் பெயர் கொண்ட திருநாள் முக்கூட்டுகல் புனித மரியன்னை இளம் குரு மடத்தில் வைத்து கொண்டாடப்பட்டது.

***அருட்சகோதரர்கள் யோசேப் & வின்சிலின்***

# மறைமாவட்டச் செய்திகள்

## *குருத்துவ அருட்பொழிவு*



திருத்தொண்டர் வர்கீஸ் (அமன்டோ) அவர்கள் 2ஆம் தேதி ஜனவரி 2025 அன்று, இடுக்கி, தாந்நிகண்டத்தில் உள்ள புனித கன்னி மரியா ஆலயத்தில் வைத்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களால் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். திருத்தொண்டர் அமன்டோவுடன் ஜகதல்பூர் மறைமாவட்டத்திற்காக சேர்ந்த அவரது சகோதரர் திருத்தொண்டர் பால் (ராபின்) அவர்கள், மார் ஜோசப் கொல்லம்பரம்பில் CMI அவர்களால் குருவானவராக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

## *சங்ஙனாச்சேரியில் மறைமாவட்டங்களுக்கு இடையேயான கூட்டம்*

சங்கனாச்சேரி உயர் மறைமாவட்டத்தைச் சார்ந்த 4 மறைமாவட்டங்களுக்கான, 2025 ஆம் ஆண்டின் முதல் கூட்டமானது செத்திப்புழா புனித தாமஸ் மருத்துவமனையில் நடைபெற்றது. பாலா, காஞ்ஞிரப்பள்ளி, தக்கலை ஆகிய மூன்று மறைமாவட்டங்களின் ஆயர்கள் மற்றும் சங்ஙனாச்சேரி பேராயர் மார்

தோமஸ் தறயில் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னாள் உயர் பேராயர் மார் ஜோசப் பெரும்தோட்டம் அவர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார். கூட்டத்தில் நான்கு மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் பங்கேற்றனர். நமது மறைமாவட்டத்திலிருந்து பேருட்தந்தை தாமஸ் பவத்துபரம்பில், பேருட்தந்தை ஜோஷி குளத்தும்கல், பேருட்தந்தை ஜான்சிலால் அறக்கபரம்பில், அருட்தந்தை டென்சி முண்டுநடக்கல், அருட்தந்தை டோபின் ஆலப்புரக்கல், அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ், அருட்தந்தை அபிலாஷ் சேவியர், அருட்தந்தை லின்டோ தகிடியேல் மற்றும் அருட்தந்தை லிஜு மறாட்டுகளம் ஆகியோர் கலந்து கொண்டனர். சமூகம், கல்வி மற்றும் வழிபாடு குறித்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

### *தமிழக ஆயர் பேரவை*

TNBC கூட்டம் 21 ஜனவரி 2025 அன்று மதுரையில் உள்ள பில்லர் என்கிற இடத்தில் வைத்து மதுரை பேராயரால் துவங்கப்பட்டது. மேதகு ஆயர் லாரன்ஸ் பயஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியுடன் கூட்டம் தொடங்கியது. டிஎன்பிசி தலைவர் மேதகு ஆயர் ஜார்ஜ் அந்தோணிசாமி தொடக்க உரையாற்றினார். கூட்டொருங்கியக்க திருச்சபை, சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் உரிமைகள் மற்றும் சவால்கள் போன்ற தலைப்புகளில் கலந்துரையாடப்பட்டது.

### *டான் போஸ்கோவின் பெயர் கொண்ட விழா*

ஜனவரி 31 அன்று சங்கமத்தில் டான் போஸ்கோவின் பெயர் கொண்ட விழா மேதகு ஆயர் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு மறைவட்ட பேருட்தந்தையர்கள், தக்கலை-பிலங்கலை மறைவட்டத்தை சேர்ந்த அருட்தந்தையர்கள், மாகாண தலைவியர்கள் மற்றும் அருட்சகோதரிகள் பங்கேற்றனர். அருட்தந்தை ஜார்ஜ் களங்நரா SDB மற்றும் அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி SDB, அவர்கள் டான் போஸ்கோவின் செய்திகளைப் பகிர்ந்து கொண்டனர். பேருட்தந்தை தோமஸ் பவத்துப்பறம்பில் விருந்தினர்களை வரவேற்றார்.

## மறைவட்டச் செய்திகள்

## தக்கலை – பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம், பிலாங்காலை

2025 ஜனவரி 1 ஆலயத்தில் திருப்பலி முடிந்த உடன் பங்குதந்தையின் குருத்துவ அருட்பொழிவு விழாவின் 25 ம் வருட நிறைவு நாள் விழா கொண்டாடப்பட்டது. ஜனவரி 3 சாவறா அடிகளாரின் திருவிழா கொண்டாடப்பட்டது. ஜனவரி 5 பங்களவில் கிறிஸ்து யூபிலி துவக்க விழா கொண்டாடப்பட்டது. ஜனவரி 6 தெனகா திருவிழாவும் ஜனவரி 14 இல் திருப்பலி முடிந்த உடன் பொங்கல் விழாவும் நடைபெற்றது. அன்றைய தினம் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது.



ஜனவரி 19 ஞாயிற்றுக்கிழமை பொங்கல் போட்டிக்கான பரிசுகள் வழங்கப்பட்டது. புனித செபஸ்தியார் பெயர் கொண்ட பங்குதந்தையின் பெயர் கொண்ட விழா ஆலயத்தில் கொண்டாடப்பட்டது. ஜனவரி 19 ஆலயத்தில் திருப்பலி முடிந்த உடன் மிஷன் லீக் சார்பில் ஆராதனை நடத்தப்பட்டது. தொடர்ந்து பெரிய காடு ஆலயம் சென்று அங்கு இருக்கும் நோயாளிகளுக்கு மிஷன் லீக் மாணவர்கள் சார்பில் மதிய உணவு வழங்கப்பட்டது. இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. அதை தொடர்ந்து நேர்ச்சை கஞ்சி வழங்கப்பட்டது.

### புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

தெனகா திருவிழா அன்று திருப்பலி முடிந்த உடன் அங்கு உள்ள 14 குடும்பத்தினரும் வாழைப்பிண்டி வைத்து பங்குதந்தையுடன் இணைந்து ஒளியேற்றி தெனகா திருவிழாவை சிறப்பாக கொண்டாடினர்.

## புனித ஜார்ஜியார் ஆலயம் ஆனையடி

ஜனவரி 1 ம் தேதி ஆடம்பர திருப்பலி தொடர்ந்து ஆராதனை நடைபெற்றது. 6 ம் தேதி தெனகா திருவிழா கொண்டாடப்பட்டது. 14 ம் தேதி காலை 7 மணிக்கு திருப்பலி தொடர்ந்து பொங்கல் விழா மற்றும் போட்டிகள் நடத்தப்பட்டன.

## புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

பங்களவில் கிறிஸ்து யூபிலி துவக்க விழாவும் தெனகாத் திருவிழாவும் கொண்டாடப்பட்டது. 19 ம் தேதி மறைக்கல்வி மாணவர்கள் சார்பில் தடிக்காரன்கோணம் சென்று அங்கு இருக்கும் நோயாளிகளுக்கு மதிய உணவு சமைத்து வழங்கப்பட்டது.



## புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் காட்டாத்துறை

டிசம்பர் 31 அன்று இரவு 11 மணிக்கு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. தொடர்ந்து புத்தாண்டு திருப்பலி சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜனவரி 6 தெனகாத் திருவிழா கொண்டாடப்பட்டது. 12-ஆம் தேதி ஜீபிலி தொடக்க விழா பங்களவில் கொண்டாடப்பட்டது. புனித மிக்கேல் அதிதூதர் குருசடி வளாகத்திலிருந்து சிலுவை நிறுவப்பட்ட இலட்சினை மந்திரித்து ஆடம்பர பவனியாக ஆலயத்தித்திற்கு கொண்டுவரப்பட்டது. அன்று யூபிலியை பற்றிய மறையுரை நிகழ்த்தப்பட்டது. 14ஆம் தேதி பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. 18 ஆம் தேதி மறைக்கல்வி மாணவச் செல்வங்கள் மற்றும் மறைக்கல்வி

ஆசிரியர்களுடன் சுற்றுலா செல்லப்பட்டது. கயத்தாறு திருத்தொண்டு தளம் சந்திக்கப்பட்டு மாணவர்களால் சேகரித்து வைக்கப்பட்ட தொகை கொடுக்கப்பட்டது. தென்காசி ரெயில்வேகேட் திருத்தொண்டு தளமும் சந்திக்கப்பட்டது. ஜனவரி 26 அன்று தேசிய கொடி உயர்த்தப்பட்டு குடியரசு தின விழாவும் சிறப்பிக்கப்பட்டது.

**நாகர்கோவில் அல்போன்சா பள்ளியில் 35–ஆவது ஆண்டு விழா**




நாகர்கோவில் அல்போன்சா பள்ளியின் 35-ஆவது ஆண்டுவிழா ஜனவரி 30, வியாழக்கிழமை பள்ளி அரங்கில் வைத்து, தக்கலை மறைமாவட்ட ஆயர் மேதகு மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## தூசைபுரம்

**பாத்திமா அன்னை ஆலயம் பாத்திமாபுரம்**

ஜனவரி 6 தெனகாத் திருவிழா கொண்டாடப்பட்டது. ஜனவரி 19, பங்குத்தந்தை அவர்களின் பெயர் கொண்ட திருநாள் கொண்டாடப்பட்டது. ஜனவரி 26, அருட்சகோதரி ஆன்சிட் அவர்கள் தியானத்திற்காக நான்கு மாதங்கள் கேரளாவுக்கு செல்ல இருப்பதால் அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

## புனித வியாகப்பர் ஆலயம் – மாங்கரை

ஜனவரி 5, பிற்பகல் 2.00 மணிக்கு அருட்தந்தை டோஜி தலைமையில் பங்குப் பேரவை நடைபெற்றன. தெனகா திருநாளை முன்னிட்டு மாலை 6.00 மணிக்கு ஆடம்பர திருப்பலி அதை தொடர்ந்து ஆலயத்தின் முன் வாழைத்தண்டில் தயார் செய்த அகல் விளக்கில் தீபம் ஏற்றி சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜனவரி 14, பொங்கல் விழாவை முன்னிட்டு 8 உறவியங்கள் 8 பானைகளில் தனித்தனியாக பொங்கல் பொங்கி 6.15 மணிக்கு திருப்பலி அதை தொடர்ந்து அனைவருக்கும் பொங்கல் வழங்கி, இளையோர்கள் சார்பாக விளையாட்டு போட்டி நடத்தப்பட்டது. இளைஞர் இயக்கம் சார்பாக கொடைக்கானல் சுற்றுலா சென்றனர். ஜனவரி 17, 18 ஆகிய தேதிகளில் மிஷன் லீக் மாணவர்கள் இல்லங்களில் ஆக்கர் எடுக்க சென்றனர். ஜனவரி 19, பங்குத்தந்தை தலைமையில் திருப்பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றன. ஜனவரி 10,17,24 ஆகிய மூன்று வெள்ளிக்கிழமைகளில் புதிதாக ஆலயத்தில் Keyboard பயிற்சி பெற்ற மூன்று மாணவர்கள் திருப்பலிக்கு முதல் முறையாக Keyboard வாசித்தனர். ஜனவரி 26, மாதர் ஜோதிஸ் உறுப்பினர்களுக்கு தக்காளிவிளை பங்கை சேர்ந்த திரு. றீகன் போதை விழிப்புணர்வு பற்றி சிறப்பாக வகுப்பு நடத்தினார்.

## திருக்குடும்ப ஆலயம் தக்காளிவிளை

திருக்குடும்ப ஆலயத்தின் திருவிழா ஜனவரி 15 முதல் 19ஆம் தேதி வரை பங்கு தந்தை அருட்தந்தை ஷிஜோ ஜோஸ் ஐக்கரகுந்நேல் அவர்கள்



வழிகாட்டுதலில் பங்கு மக்களின் ஒத்துழைப்போடு நடைபெற்றது. ஜனவரி 18, தக்கலை மறை மாவட்ட மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் ஆடம்பர திருப்பலியில் கலந்துகொண்டு மூன்று குழந்தைகளுக்கு முதல் திருவிருந்து வழங்கி இறையாசீர் அருளினார். அன்றைய தினம் மாலையில் சிறப்பு தேர் பவனி நடைபெற்றது.

## புனித தோமையார் ஆலயம் மாதாபுரம்

ஜனவரி 6, தெனகாத் திருநாளை முன்னிட்டு ஆடம்பர திருப்பலி அதை தொடர்ந்து ஆலய வளாகத்தின் முன் பகுதியில் வாழைத்தண்டில் தயார் செய்த அகல் விளக்கு ஏற்றி சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜனவரி 14 ஆலயத்தில் திருப்பலி முடிந்த உடன் பொங்கல் விழா நடைபெற்றது. ஜனவரி 18, இளையோர்கள் சார்பாக சுற்றுலா சென்றனர். ஜனவரி 26, திருப்பலிக்கு பின் மாதர் ஜோதிஸ் உறுப்பினர்களுக்கு திருமதி வினீஷா சுஜி அவர்கள் குழந்தைகளின் பராமரிப்பு பற்றி சிறப்பான முறையில் வகுப்பு நடத்தினார்.

## கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

புத்தாண்டு நிகழ்வுகள் முந்தைய நாள் 31.12.24 இரவு 9:30 மணி ஆராதனையோடு தொடங்கி திருப்பலி மற்றும் கூட்டத்தோடு நிறைவு பெற்றது. 6 ஆம் தேதி



காலை 6.30 மணி திருப்பலியோடு தெனகாத் திருநாள் கொண்டாடப்பட்டது. 12 தேதி திருப்பலியில் CSI கன்னியாகுமரி மறைமாவட்ட பயிற்சி போதகர்கள் சுமார் 40 பேர் பங்கேற்று நமது வழிபாட்டு முறையின் அனுபவம் பெற்றனர். 13 ஆம் தேதி உறவியம் சார்பில் கோலப் போட்டியும் பொங்கலிடும் நிகழ்வும் நடைபெற்று

தமிழர் திருநாள் பொங்கல் பங்கில் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மதியம் 3 மணிக்கு நட்டாலம் தேவ சகாயம் பிள்ளை திருத்தலத்தில் மறைவட்ட அருட்தந்தையர்கள் மற்றும் குருகுல முதல்வர் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் திரளான மக்கள் பங்கேற்றனர். 17 ஆம் தேதி பங்குத்தந்தை அருட்தந்தை அஜின் ஜோஸ் அவர்களின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. மாதம் தோறும் சீனாய் தியான இல்லத்தின் தலைமையில் நடைபெறும் மறைவட்ட தியானம் 23 ஆம் தேதி வெள்ளி மாலை நடைபெற்றது.

**புனித சூசைப்பர் மறைவட்ட தேவாலயம் சூசைபுரம்**

ஜனவரி 05, கிறிஸ்து யூபிலி ஆண்டின் பங்களவிலான துவக்க விழாஞாயிற்றுக்கிழமை காலை ஏழு மணிக்கு SABS கன்னியர் இல்ல சிற்றாலயத்தில் வைத்து திருப்பலியுடன் ஆரம்பமானது. யூபிலி தொடக்க வழிபாட்டை தொடர்ந்து இறை மக்கள் அனைவரும் ஆலயம் நோக்கி பவனியாக வந்தனர். பின்னர், பங்குத்தந்தை அவர்களால் யூபிலி மெழுகு திரியானது ஏற்றி வைக்கப்பட்டு திருப்பலி தொடரப்பட்டது. ஜனவரி 06, தெனகாத் திருவிழா



கொண்டாட்டமானது மாலை 5:45 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமானது. அன்று 12 உறவிய இறை மக்களும் ஆலயத்தைச் சுற்றிலும் வாழைத்தண்டுகளில் விளக்குகள் ஏற்றி ஒளிமயமாக்கினர். ஜனவரி 13, களஅனுபவம் பெற திருத்தொண்டர் அனுப் அவர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தார்கள். ஜனவரி 14, பொங்கல் திருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று அதிகாலை முதலே 12 உறவிய இறை மக்களும் ஆலயத்தைச் சுற்றிலும் வண்ண கோலமிட்டு பொங்கலிட்டு மகிழ்ந்தனர். பின்னர் பங்குத்தந்தை தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலிக்கு பின்னர் அனைவரும் பொங்கலை பகிர்ந்து

இன்புற்றனர். அன்று மதியம் நட்டாலம் புனித தேவசகாயம் பிள்ளை திருத்தல திருவிழாவினில் நமது சீரோ மலபார் வழிபாட்டு முறையில் குருகுல முதல்வர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட கூட்டு திருப்பலியில் பெரும்பாலான இறைமக்கள் கலந்து கொண்டனர்.

## மஞ்சாலுமூடு

### புனித பெனடிக் ஆலயம் பென்கிரி

புனித பெனடிக் ஆலயம் பென்கிரியில் வைத்து FCC அருள் சகோதரிகளின் குடும்ப விழா ஆண்டு தொடங்கப்பட்டது.

### புனித மரியன்னை ஆலயம் முக்கூட்டுகல்

முக்கூட்டுகல் திருக்குடும்ப ஆலய திருவிழா ஜனவரி 10, வெள்ளிக்கிழமை தொடங்கி ஜனவரி 20, திங்கட்கிழமை வரை நடைபெற்றது. பங்குத்தந்தை சுபின் புத்தன்புரைக்கல் அவர்கள் திருக்கொடியேற்றி தொடங்கி வைத்தார்கள். திருவிழா தொடர்ந்து 11 தினங்கள் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஜெபமாலை மற்றும் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. நான்கு தினங்கள் "டிவைன் தியான இல்லம் சாலக்குடி" அருள் தந்தையர்களின் "நற்செய்தி பெருவிழா" நடைபெற்றது. ஒன்பதாம் நாள் திருவிழாவில் "மொழி" என்ற நாடகம் நடைபெற்றது. 11-ம் நாள் திருவிழாவில் மறை மாவட்ட ஆயர் அவர்கள் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி குருத்துவ மற்றும் துறவற ஜூபிலி கொண்டாட்டங்களில் கலந்து கொண்டார்கள்.. பின்னர் திருக்கொடி இறக்கி திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

### புனித தோமையார் ஆலயம் முழுக்கோடு

ஜனவரி 05, புதிய பங்கு பேரவை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஜனவரி 26, ஞாயிற்றுக்கிழமை புனித மரியன்னை இளங்குருமடம் முக்கூட்டுக்கல்லில் உள்ள இயக்குனர் தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரர்கள் இணைந்து புனித தோமையார் ஆலயம் முழுக்கோட்டில் திருப்பலி அர்ப்பித்து இறை அழைத்தலுக்காக ஜெபித்தார்கள். திருப்பலிக்கு பின் அருள் தந்தையர்கள் மற்றும் அருள் சகோதரர்கள் சேர்ந்து மறைக்கல்வி மாணவ மாணவிகளை சந்தித்து இறை அழைத்தலுக்கான ஊக்குவிப்பு வகுப்பு நடத்தினார்கள்.

### புனித குழந்தை தெரசா ஆலயம் மஞ்சாலுமூடு

ஜனவரி 05, புனித வின்சென்ட் தே பவுல் சங்கம் சார்பாக பங்கு தந்தையுடன் தோலடி காருண்யா மன நல காப்பகத்தில் துணிகள் வழங்கப்பட்டது. ஜனவரி 06, தெனகா திருநாளை முன்னிட்டு மாலை திருப்பலியில் அனைத்திற்கும் ஆண்டவரே பாடலுக்கு முன் வெளியே தயார் செய்து வைத்திருந்த 13 வாழை தண்டில் உறவிய வரிசையில் நின்று தீபம் ஏற்றி பின் திருப்பலி தொடர்ந்தது. ஜனவரி 12, இளைஞர் இயக்கம் சார்பில் தோலடி காருண்யா மன நல காப்பகத்தில் உணவு வழங்கப்பட்டது. ஜனவரி 14, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு காலை திருப்பலிக்கு பின் இளையோர் இயக்கம் சார்பில் பொங்கல் வைத்து விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. ஜனவரி 15, மறைமாவட்ட இளையோர் இயக்கம் சார்பாக பொங்கல் கொண்டாட்டம் கல்லுவிளையில் நடத்தப்பட்டது. நமது இளைஞர்கள் 25 பேர் கலந்து கொண்டனர். ஜனவரி 16, மறைமாவட்ட கலை போட்டியில் பரிசு பெற்று மொத்தம் 57 புள்ளிகளுடன் முதலிடம் கிடைத்தது. ஜனவரி 18, லத்தீன் சபையை சார்ந்த மஞ்சாலுமூடு புனித அந்தோணியார் ஆலயத்தில் இருந்து வந்த பவனியை வரவேற்று சப்பரங்களுக்கு மலர் மாலை அணிவித்து மந்திரித்து தூபம் காட்டி வந்தவர்களுக்கு தேநீர் வழங்கி அனுப்பி வைக்கப்பட்டது.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் புத்தாண்டு சிறப்பு திருப்பலி 2024 டிசம்பர் 31 அன்று இரவு 10.00 மணியளவில் வருட இறுதி ஆராதனையுடன் நடைபெற்றது.



திருப்பலியின் இறுதியில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. 2025 ஜனவரி 6 திங்கட்கிழமை தெனகாத்திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாலை 5.30 மணியளவில் செபமாலையும் தொடர்ந்து ஆடம்பரத்திருப்பலியும், உறவியங்களின் சார்பாக ஒளியேற்றுதல் நிகழ்வும் நடைபெற்றது. இளையோர் இயக்கம் சார்பாக ஒருநாள் சுற்றுலா ஜனவரி 14 செவ்வாய்கிழமை நடைபெற்றது. கேரள மாநிலம் வாகமன் பகுதிகளில் ஒருநாள் முழுவதும் செலவிட்டனர்.

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் படந்தாலுமூடு

ஜனவரி 05, அன்று பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய பங்கு பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். ஜனவரி 12, திருப்பலிக்கு பின் இளையோர் இயக்கம் சார்பாக பொங்கல் விழா கொண்டாடப்பட்டது.

### புனித பவுல் ஆலயம் தெற்றியோடு

ஜனவரி 05, பங்களவில் கிறிஸ்து ஜூபிலி தொடக்க விழா கொண்டாடப்பட்டது. ஜனவரி 14 பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் மறைக்கல்வி மாணவர்களுக்கான பல்வேறு போட்டிகளும் நடைபெற்றது.

### புனித தோமையார் ஆலயம் பளுகல்

ஜனவரி 12, தாய்மார்களுக்கான ஒருநாள் சிறப்பு தியானம் நடைபெற்றது. இத்தியானத்தை சகோதரர் ஜாண்சன் அவர்கள் வழிநடத்தினார்கள். மேலும் எல்லா மாதமும் இரண்டாம் சனிக்கிழமை மாலை 5: 30 மணி முதல் 9 மணி வரை தியானம் நடைபெற்று வருகிறது.

### மார்டின் டி போரஸ் ஆலயம், கழுவன்திட்டை

ஜனவரி 05 பங்களவில் கிறிஸ்து ஜூபிலி தொடக்க விழா கொண்டாடப்பட்டது. ஜனவரி 12, பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. திருப்பலிக்கு பின் பொங்கல் விழா ஆடம்பரமாக கொண்டாடப்பட்டது.

### மரிய கொரற்றி ஆலயம் அதங்கோடு

ஜனவரி 05, பங்களவில் கிறிஸ்து ஜூபிலி தொடக்க விழா கொண்டாடப்பட்டது. 6 ஆம் தேதி திங்கட்கிழமை தெனகாத்திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தமிழர் திருநாளாம் பொங்கல் விழா ஜனவரி 14 அன்று காலை 6.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமானது.

## நித்திரவிளை

### புனித சவேரியார் ஆலயம் – வாறுதட்டு

ஜனவரி 19-ஆம் தேதி புனித தேவ சகாயம் பிள்ளை அவர்களின் திருநாளை முன்னிட்டு ஜனவரி 12, ஞாயிறு முதல் ஜனவரி 16, வியாழன் முடிய ஒவ்வொரு நாளும் வீடுகளில் ஜெபமாலை நடத்தப்பட்டது. இறுதி நாள், 19-ம் தேதி காலை திருப்பலி மற்றும் காணிக்கை பவனி சிறப்பித்ததோடு மாலை 6 மணிக்கு உறவியக் கூட்டமும் தொடர்ந்து உறவிய பாதுகாவலர் தின விழாவும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. ஜனவரி 26, மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் வருகை தந்து திருப்பலி ஒப்புக் கொடுத்து மாணவர்களுக்கு முதல் திருவிருந்து மற்றும் உறுதி பூசுதல் வழங்கி ஆசி அளித்தார்.

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

2025 ஜனவரி 6 திங்கட்கிழமை தெனகாத்திருநாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### புனித அமல மரியா ஆலயம் சீனிவிளை

ஜனவரி 06-ம் தேதி தெனகாத் திருநாள் ஆடம்பர திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. திருப்பலியின் நிறைவில் வாழைத்தண்டில் பிண்டிகுத்தி ஒளி ஏற்றி மக்கள் மகிழ்ந்தனர். ஜனவரி 19, அருட்தந்தை சுமேஷ் அவர்களின் பிறந்த நாள் விழா மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அனைவரும் தந்தை அவர்களுக்கு வாழ்த்து சொல்லி மகிழ்ந்தனர்.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## தெனகா திருநாள்

ஜனவரி 6 ஆம் தேதி தெனகாத் திருநாள் அனைத்து பங்குகளிலும் வாழைத்தண்டுகளில் விளக்குகள் ஏற்றி மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## பொங்கல் திருவிழா கொண்டாட்டம்

தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழா அனைத்து ஆலயங்களிலும் மிக



சிறப்பாக கொண்டாடப்பட்டது. வாஞ்சி ஆலயத்தில் காலையில் பங்கு மக்கள் அனைவரும் இணைந்து பொங்கலிட்டு பொங்கல் திருவிழாவை சிறப்பித்தனர். அதுபோன்று தென்காசி ரயில்வே கேட் இடத்தில் பொங்கலிட்டு சிறப்பித்தனர். புலரி சமூக சேவை மையத்திலும் பொங்கலிட்டு பொங்கல் திருவிழா சிறப்பிக்கப்பட்டது. மேக்கரை ஆலய மக்கள் இணைந்து பொங்கலிட்டு பொங்கல் திருவிழாவை சிறப்பித்தனர். புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடத்தில் பொங்கல் திருவிழா தாளாளர் அருட்தந்தை டென்சி முண்டு நடைய்க்கல் மற்றும் துணைத்தாளாளர் அருட்தந்தை பிரின்ஸ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து பொங்கலிட்டு பொங்கல் திருவிழாவை சிறப்பித்தனர்.

## மறைமாவட்ட அளவிலான மறைக்கல்வி போட்டிகள்



மறைமாவட்ட அளவிலான மறைக்கல்வி போட்டிகள் ஜனவரி மாதம் 15 ஆம் தேதி படந்தாலுமூட்டில் வைத்து நடத்தப்பட்டது. அதில் தென்காசி மறைத்தளத்தை சார்ந்த மாணவர்களும் பங்கு பெற்று பரிசுகளை வென்றனர்.

## புலரி மெட்ரிகுலேஷன் பள்ளி ஆண்டு விழா

புலரி மெட்ரிகுலேஷன் பள்ளியின் 20 ஆம் ஆண்டு விழாவானது ஜனவரி மாதம் 25 ஆம் தேதி மாலை 5.30 மணி அளவில் தொடங்கப்பட்டது.ஆயர் அவர்கள் வருகை தந்து வாழ்த்துரை வழங்கி விழாவினை சிறப்பித்தார், சிறப்பு விருந்தினர்களாக துணை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லாவண்யா மற்றும் அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாணவ மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் ஆண்டு விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி ராஜிதா**

## MONTHLY AGENDA – FEBRUARY 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 04.00 pm | Minor Seminary Home Day Celebrations @ Mukkottukal |
| 2 | Sun | | CAT : Basic training Programme for Catechists : Class II at Padanthalumoodu (Batch:VII)<br>CML: National Secretariat meeting<br>KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Manjalumoodu<br>LC: Central Council Meeting at Kalluvilai<br>SMYM: Thuckalay Pilankalai Forane Gathering<br>MJ: Madurai Mission Visit<br>SVP: CC Meeting |
| 3 | Mon | 06.00 pm | Education Commission Meeting @ Bishop's House |
| 7 | Fri | | VC: Adoration for Vocation (Kaliyal Forane) HC: Awareness On Cancer at Kaliyal<br>SINAI: Retreat at Vattakottai<br>FA: Marriage Preparation Course |
| 8 | Sat | | CAT: Bible Fest 2024-2025 Forane Level Teachers Competition at Padanthalumoodu; Bible Quiz Competitions for Teachers (Diocese Level) @ Padanthalumoodu<br>CML: National Executive Committee meeting<br>SINAI: Evening Retreat at Malaicode<br>FA: Marriage Preparation Course<br>MS: Visiting Old Age Home<br>CRI: Monthly Recollection<br>TM: Mission Meet |

| | | | |
|---|---|---|---|
| 9 | Sun | | CAT : Basic training Programme for Catechists : Class III at Padanthalumoodu at 2.30- 5.00pm Batch:VII) KII: Diocesan level competition ( Arukani, Kaliyal )<br>KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Mathapuram<br>LC: Forane Leaders Meeting SMYM: Kaliyal Forane Unit visit<br>FA: Marriage Preparation Course<br>SVP: AC Meeting |
| 10 | Mon | | MJ: Last date to submit the task 2024<br>EIRD: Kanyakumari United Christian Council Meeting<br>ET: Mission Meet<br>Paliative Care patients meet @ Kalluvilai |
| 11 | Tue | | SINAI: Intercessory Prayer |
| 13 | Thu | | Orientation program for Priests – Day I @ Sangamam MJ: Forane Directors Meeting |
| 14 | Fri | | Orientation program for Priests – Day II @ Sangamam |
| 15 | Sat | | KII: Diocesan level competition (Manjalummmodu, Nithiravilai, Padanthalummodu, Soosaipuram, Thuck-Pilankalai) @ Padanthalummodu |
| 16 | Sun | | CAT: Basic training Programme for Catechists : Class IV at Padanthalumoodu (Batch:VII)<br>KKSSS: Gatekeeping Programme for Parish Council and Pious Association leaders at Cheenivilai<br>SMYM: Christ Jubilee - Inauguration<br>URM: Manjalumoodu Forane Leaders Meeting |

| | | | |
|---|---|---|---|
| 17 | Mon | | EIRD: Regional United Christian Council Meeting |
| 18 | Tue | | SINAI: Intercessory Prayer |
| 21 | Fri | | SINAI: Evening Retreat at Palappallam |
| 22 | Sat | | KII: Diocesan level competition at Tenkasi and extended territories<br>SINAI: One day Retreat at Kalluvilai<br>MJ: Executive Meeting<br>TCSL: Moral and GK exam |
| 23 | Sun | | CAT: Basic training Programme for Catechists : Class V at Padanthalumoodu (Batch:VII); Bible Quiz Competitions for Students (Diocese Level) at Padanthalumoodu SMYM: Kaliyal Forane Gathering |
| 25 | Tue | | KKSSS: Livestock management programme @ Netta |
| 27 | Thu | | KKSSS: PRI Meeting |

FR.THOMAS POWATHUPARAMPIL, PROTOSYNCELLUS

# BISHOP'S ENGAGEMENTS - FEBRUARY 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Sat | 04.00 pm | Mukkottukal : Minor Seminary Home Day Celebrations |
| 2 | Sun | 04.00 pm | Kulasekaram : Church Blessing |
| 3 | Mon | 07.00 am<br>05.30 pm | Champakulam : Requiem Holy Qurbana<br>Bishop's House : Education commission<br>Bishop's House : V star executives meeting |
| 4 | Tue | 10.00 am | Bishop's House : Department meet-ing |
| 5 | Wed | 10.00 am | Bishop's House : Department meeting |
| 6 | Thu | 10.00 am | Bishop's House : Palliyogam statues Committee meeting<br>Bishop's House : Curia Meeting |
| 7 | Fri | 10.00 am | Bishop's House : Departments meeting |
| 8 | Sat | 05.00 pm | Madurai : Feast Day Qurbana |
| 9 | Sun | 03.00 pm<br>05.00 pm | Palappallam : Mariyavin Senai gathering Marthandam : Blessing of Marthandam Church |
| 10 | Mon | 10.00 am | Kalluvilai : Jubilee of the Sick. |
| 11 | Thu | 02.00 pm<br>06.00 pm | Bishop's House : Goodness TV<br>Paraicode : Kurisadi Blessing |
| 12 | Wed | 04.00 pm | Mukkootukal : Minor Seminary Visit |
| 13 | Thu | 10.00 am | Sangamam : Orientation program for Priests – Day I |

| | | | |
|---|---|---|---|
| 14 | Fri | 10.00 am | Sangamam : Orientation program for Priests – Day II |
| 15 | Sat | 05.00 pm | Kaliyakkavilai : ECI Church Episcopal Ordination |
| 16 | Sun | 11.00 am | Munchirai : SMYM Jubilee year launch Holy Qurbana |
| 17 | Mon | 08.00 am | Karode : DSS General's visit |
| 17-19 | Thu | | Priests Picnic >> Mangalore |
| 20-21 | Fri | | Mangalore >> Thuckalay |
| 22 | Sat | 10.00 am | Kalluvilai : Jubilee of the Differently abled >> Coimbatore |
| 23 | Sun | 02.00 pm | Palappallam: Cemetery blessing |
| 24 | Mon | 10.00 am | Bishop's House : Curia Meeting |
| 25 | Tue | 10.00 am | Kalluvilai : Nidhi Board members meeting |
| 26 | Wed | | Prayer day |
| 27 | Thu | 05.00 pm | Nithiraviali : Karunaillam Anniversary |
| 28 | Fri | 02.00 pm | Arukani: Farewell meeting |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**



First Holy Communion,
January 26, 2025, Varuthattu



Parish Feast and First Holy Communion,
January 18, 2025, Thakkalivilai



Baptism at Mission Station,
January 19, 2025, Kayathar





PRIESTLY ORDINATION OF DN. AMANTO (VARGHESE) EDAKKOOTTATHIL,
JANUARY 2, 2025, ST. MARY'S CHURCH, THANNIKANDAM

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570